1980 பிப்ரவரி 1] [திரு. கி. மனோகரன்]

சட்டத்தில் இருக்கிறது. இந்தப் படி, இனிமேல் திங்கள் ஒன்றுக்கு ரூ. 250 ஆக இறந்த உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கு கொள்கிறேன். இது இந்த ஆறாவது பேரவை தொடக்க காலத்தில் இருந்து அமலுக்கு வரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா அவர்கள் மறைவுக்கு இந்த பேரவையிலே இருக்கிற அத்தனைக் கட்சித் தலைவர்களும், அமைச்சர் பெருமக்களும், உறுப்பினர்களும் தெரிவித்துக்கொண்ட தங்களுடைய வருத்தத் தோடும், இரங்கல் செய்தியோடும் நானும் இணைந்து அன்னா ருடைய குடும்பத்தாருக்கு என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவை முன்னவரின் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப் பெற்றது

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>— உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(பின்னர் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மவுனமாக நின்றனர்).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன. பேரவை நாளை காலை 9·00 மணி அளவில், மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 9.25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

3. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

*1. ஓய்வுபெற்ற தலைமைப் பொறியலாளர் திரு. எஸ். எச். மகாதேவனை 13-7-1979–ஆம் தேதியிலிருந்து மேலும் ஓராண்டு காலத்திற்கு தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் அலுவல் சார்பற்ற உறுப்பினராகத் தொடர்ந்து நீட்டிப்பது குறித்து வீட்டு வசதி–நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 5-9-1979–ஆம் தேதியிடப்பெற்ற 1757 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971–ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல்-அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

*2. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தீர்வை விதிக்கப் பெறாத நிலங்களின் மீது ரயத்துவாரி வரி விதிப்புச் சட்டத்தை 16-10-1979-ஆம் தேதி முதற்கொண்டு செயலுக்குக் கொண்டு

வருவது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 16-10-1979–ஆம் தேதியிடப்பெற்ற 1646-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு தீர்வை விதிக்கப்பெறாத நிலங்களின் மீது ரயத்துவாரி வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1973) 22 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

*3. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சத்தியமங்கலம் துணை வட்டத்தை முழு அளவிலான வட்டமாகத் தரம் உயர்த்துவது ஊராட்சி ஒன்றியப் பகுதிகளை மாற்றியமைப்பது குறித்து ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 20-7-1979–ஆம் தேதியிடப்பெற்ற 1099-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு, (தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

*4. வேளாண்மைத் துறையைச் சேர்ந்தபொறியியல் பிரிவில் உள்ள மண்வள உதவியாளர்கள் பதவியினை தேர்வாணைக் கழக வரம்பெல்லைக்குள் சேர்ப்பதன் பொருட்டு, தமிழ்நாடு 1954–ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, பணியாளர் அமைப்பு-நிர்வாக சீர்திருத்தத் துறையின் (பணியாளர் அமைப்பு— M) 20-9-1979-ஆம் தேதியிடப்பெற்ற 1073–ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

*5. கண்காட்சிகள் மற்றும் திருவிழாக்கள் நடைபெறும் போது பயணியர் பேருந்துகளில் பயணியர் நின்றுகொண்டு பயணம் செய்வதற்கு அனுமதியளிப்பதற்காக தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 10-9-1979-ஆம் தேதியிடப் பெற்ற 2272-ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு. [1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

*6. உயர்நீதிமன்ற 163 (d) விதியில் கண்ட ஆணைகளின் அடிப்படையில் அனுமதிச் சீட்டுகள் வழங்குவதற்கான ஆவணங்கள் அளிக்க வேண்டிய கால அளவு சம்பந்தமாக, தமிழ்நாடு 1940–ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 10-9-1979-ஆம் தேதியிடப்பெற்ற 2271–ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

1980 பிப்ரவரி 1]

*7. ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் வரவு-செலவுத் திட்டம் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்தல் சம்பந்தமான விதிகளில் திருத்தம் ஒன்று செய்வது குறித்து ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 21-9-1979-ஆம் தேதியிடப்பெற்ற 1478-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*8. தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச்சட்டத்தின் I, II விவர அட்டவணைகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 25-9-1979-ஆம் தேதியிடப்பெற்ற 1581-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு, (தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*9. தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச்சட்டத்தின் I, விவர அட்டவணையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 3-10-1979-ஆம் தேதியிடப்பெற்ற 1591-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*10. இளநிலை தொழில் நுட்ப உதவியாளர் என்று பதவிப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள தொழில் நுட்ப ஆய்வாளர்கள், தொழில் நுட்ப விரிவுரையாளர்கள் பதவியினை தேர்வாணைக் கழக வரம்பெல்லைக்குள் சேர்ப்பதற்காக தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் அமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளர் அமைப்பு—M) 13-10-1979-ஆம் தேதியிடப்பெற்ற 1164-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

*11. சென்னையிலுள்ள இரசாயனத் தொழில் நுட்ப நிறுவனத்தில் உள்ள சர்க்கரைத் தொழில் நுட்ப முதுநிலை விரிவுரையாளர் பதவியினை அரசுத் தேர்வாணைக் கழக வரம்பெல்லைக்குள் கொண்டு வருவது தொடர்பாக தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு- நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளரமைப்பு-M) 20-9-1979-ஆம் தேதியிடப்பெற்ற 1072-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5)-ஆம் பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

[1980 பிப்ரவரி 1

*12 சென்னை பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலுள்ள திரைப்பட நூலகர் பதவியினை அரசுத் தேர்வாணைக கழக வரம்பெல்லைக்குள் கொண்டுவருவது தொடர்பாக தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக் ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது தொடர்பாக பணியாளரமைப்பு— நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளர மைப்பு) 15-10-1979-ஆம் தேதியிடப்பெற்ற 1167-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) ஆம் பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

*13. தமிழ்நாடு 1964-ஆம் ஆண்டு சீட்டு நிதி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டண வீதங்களைத் திருத்தி அமைப்பது தொடர்பாக அவ்விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வனிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 24-10-1979-ஆம் தேதியிடப்பெற்ற 1667-ஆம் எண் அரசாணை யில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 24/1961) 63(4) ஆம் பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*14. தற்போது வரவேற்பு அலுவலர்-தூதர்களை வரவேற் கும் உதவி அலுவலர் (Assistant proffessional officer) என்று பத்விப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள மாநில விருந்தினர் இல்லத்தின் வரவேற்பு அலுவலர் பதவியினை அரசுத் தேர்வாணை கழக வரம்பெல்லைக்குள் கொண்டுவருவது தொடர்பாக தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளின் இணைப்பு—I ல் சேர்த்துக் கொள்வது குறித்து பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 15—10—1979-ஆம் தேதியிடப்பெற்ற 1169-ஆம் எண் அரசாணை யில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5)-ஆம் பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

*15 வருவாய்த் துறையில் 12—3—1965.ஆம் தேதியன்று வெளியாகி தமிழ்நாடு அரசிதழ் 12—3—1965 பாகம்II பிரிவு 1ல் பக்கங்கள் 1-6ல் (ஆங்கிலத்தில்) வெளியான II-I-1061/1965-ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்.சமய அறக்கட்டளைகள் துறையின் 27—10—1979-ஆம் தேதியிடப்பெற்ற 1679-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 26/1963) 73 (5)-ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

**16. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தில் காரியங்களுக்காக, எல்லா வடிவங்களிலுமான கரும்பு வெல்லத்தைப் பொறுத்தவரையில்

[1980 பிப்ரவரி 1

மதுரை மாவட்டத்தை அறிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 1–9–1979-ஆம் தேதியிடப்பெற்ற 1715-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

**17. தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 3–10–1979-ஆம் தேதியிடப்பெற்ற 1592-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**18. கரூர் அங்காடியில் கேழ்வரகைச் சேர்ப்பது மற்றும் அவ்வங்காடியின் முகவரியை மாற்றுவது குறித்து, வேளாண்மைத் துறையின் 26–9–1979-ஆம் தேதியிடப்பெற்ற 1855-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

**19. சில ஒழுங்குமுறை அங்காடிகளின் முகவரிகளை மாற்றுவது குறித்து வேளாண்மைத் துறையின் 9–8–1979-ஆம் தேதியிடப்பெற்ற 1582-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

**20. VII-அ பிரிவு தட்டச்சரின் நியமனத்திற்கான தகுதி சம்பந்தமாக, தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நகராட்சிப் பொதுப் பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 21–7–1979-ஆம் தேதியிடப்பெற்ற 1197-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

**21. பயணியர் பேருந்து அனுமதிச் சீட்டு வழங்குவதன் பொருட்டு விண்ணப்பதாரர் அளிக்க வேண்டிய தீர்வுச் சான்றிதழ் மற்றும் மோட்டார் வண்டி வரி தேர்வுச் சான்றிதழ் ஆகியவை சம்பந்தமாகவும் குற்றங்களுக்கான பாதுகாப்பிலிருந்து மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு விலக்களிப்பது குறித்தும் தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, உள்துறையின்

29-9-1979-ஆம் தேதியிடப்பெற்ற 2486-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

**22. உணவுப் பொருள் வழங்கு துறையில் உள்ள உணவுப் பொருள் வழங்கு துறை துணை ஆணையாளர், உதவி ஆணையாளர், ஆணையாளரின் உதவிச் செயல்ாளர் ஆகிய பதவிகளை அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக வரம்பு எல்லையிலிருந்து நீக்குவதன் பொருட்டு, தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வானணக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் அமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளர் அமைப்பு-M) 17-10-1979-ஆம் தேதியிடப்பெற்ற 1180-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவையின் வைக்கப்பெற்றது).

**23. தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்க விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, கூட்டுறவுத் துறையின் 21-9-1979-ஆம் தேதியிடப்பெற்ற 585-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 119 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

**24. மாவட்ட மருத்துவ அதிகாரிகள் முதல் உதவிச் சான்றிதழ் வழங்க அனுமதிக்கும் வகையில் தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 19-7-1979-ஆம் தேதியிடப்பெற்ற 1811-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

**25. தமிழ்நாடு கல்வி சார்நிலைப் பணியின் கீழுள்ள தொழில் நுட்பக் கல்வித் துறையின் விற்பனைத் திறன் பாட இணை விரிவுரையாளர் பதவியினை தேர்வாணைக் கழக வரம்பெல்லைக்குள் சேர்ப்பதன் பொருட்டு தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் அமைப்பு-நிர்வாக சீர்திருத்தத் துறையின் (பணியாளர்-அமைப்பு-M 21-3-1979-ஆம் தேதியிடப்பெற்ற 358-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

**26. வருவாய்த் துறையில் 30-3-1965-ஆம் தேதியன்று தோன்றி, 31-3-1965-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பிரிவு I, பாகம் II, பக்கங்கள்

1980 பிப்ரவரி 1]

1-5ல் வெளியான (ஆங்கிலத்தில்) II-I 1431/1965-ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 20-11-1979-ஆம் தேதியிடப்பெற்ற 1761-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 26/1963/73 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

**27. பழைய வண்டிகளுக்குப் பதிலாகப் புதிய வண்டிகள் அமர்த்தப் பெறுவதை பொறுத்தவரையில் அனுமதிச் சீட்டில் மேல் குறிப்பு எழுதுவதற்கென கட்டணம் வசூலிப்பதற்காக, தமிழ்நாடு 1940.ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 25-7-1979 ஆம் தேதியிடப்பெற்ற 1858 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**28. ஆண்டு அல்லது மூலதன மதிப்பு நீங்கலான அடிப் படையில் வீட்டு வரி விதிப்பது சம்பந்தமான விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊர்வளர்ச்சி-உள்னாட்சித் துறையின் 6-11-1979 ஆம் தேதியிடப்பெற்ற 1758 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**29. வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கல்லூரிகள், நிறுவனங்கள், ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவை அடங்கிய தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழகச் சட்டத்தின் அட்டவணையில் திருத்த மொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் (வே.ப.I) 25-9-1979 ஆம் தேதியிடப்பெற்ற 1838-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 53 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

**30. மாவட்டத் தலைமையிடங்கள் மற்றும் ஏனைய முக்கிய நகரங்களில் உள்ள போக்குவரத்திற்குப் பயன்படுத்தப் பெறாத வண்டிகளைப பொறுத்தவரையில் நாட்டு வங்கிகளின் மூலம் வரி வசூல் செய்வது குறித்து உள் துறையின் 24-3-1979 ஆம் தேதியிடப்பெற்ற 43691/போக்குவரத்து-I 79-2-எண் குறிப்பாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1914) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

***31. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு நில அபிவிருத்தித் திட்டங்கள் சட்டத்தை செயலுக்குக் கொண்டுவருவது குறித்து வேளாண்மைத் துறையின் 2-11-1979-ஆம் தேதியிடப்பெற்ற 2028-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு நில அபிவிருத்தித் திட்டங்கள் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 44 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது],

***32. தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்க விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவுத் துறையின் 11-10-1979 ஆம் தேதியிடப்பெற்ற 629 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 119 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

***33. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் காரியத்திற்காக, எல்லா வடிவங்களிலுமான கச்சா இரப்பரைப் பொறுத்தவரையில் கன்னியாகுமரி மாவட்டத்தை அறிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 4-10-1979 ஆம் தேதியிடப்பெற்ற 1893 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

***34. தென் ஆற்காடு மாவட்டத்தில் கத்தரிக்காய்களை விலைக்கு வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் மீதான கட்டுப் பாட்டினை செயல்படுத்துவது குறித்து வேளாண்மைத் துறையின் 2-11-1979 ஆம் தேதியிடப்பெற்ற 2023-ஆம் எண் அரசாணை யில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 23/1959 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

***35. வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர், செங்கம், திருவண்ணாமலை, போளூர் ஆகிய வருவாய் வட்டங் களில் பருத்தியினை விலைக்கு வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் மீதான கட்டுப்பாட்டினை செயல்படுத்துவது குறித்து வேளாண்மைத் துறையின் 4-10-1979 ஆம் தேதியிடப்பெற்ற 1892 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

***36. தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மின்சாரத் தீர்வை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுப் பணித்)மின்சாரம்) துறையின் 22-5-1979-ஆம் தேதியிடப்பெற்

1980 பிப்ரவரி 1]

915-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மின்சாரத் தீர்வைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1939) 9 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

***37. காளமங்களம் அங்காடியில் கேழ்வரகைச் சேர்ப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 20–8–1979 ஆம் தேதியிடப் பெற்ற 1637 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

***38. தமிழ்நாடு சிறைச்சாலை சார்நிலைப் பணியிலுள்ள சமூகநலப் பணியாளர் பதவியினை தேர்வாணைக் கழக வரம் பெல்லைக்குள் சேர்ப்பதற்காக தமிழ்நாடு, 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளரமைப்பு-M) 30–11–1979 ஆம் தேதியிடப்பெற்ற 1304-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

***39. சமய நிறுவனங்கள் சிலவற்றில் அறங்காவலர்களை நியமிக்க இந்து சமய-அறக்கட்டளைகள் (நிர்வாகம்) துறை ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 12–9–1979 ஆம் தேதியிடப் பெற்ற 1468 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

%40. தமிழ்நாடு தேயிலைத் தோட்ட நிறுவனத்தின் 1977–78 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டு அறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்) மத்தியச் சட்டம் 1/1956) 619. ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

41. தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் 1977–78-ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டு அறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619. எ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

42. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் 1977-78 ஆம் ஆண்டிற்கான ஐந்தொகைக் குறிப்பு-ஆதாய விரய கணக்கு [தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது],

43. தமிழ்நாடு அரசு தேர்வாணைக் குழுவின் 1977–78 ஆம் ஆண்டிற்கான அறிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 323 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

44. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் 1978 ஆம் ஆண்டிற் கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

45. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் 31–3–1978 ஆம் தேதியுடன் முடியும் ஆண்டிற்கான 29-ஆவது ஆண்டறிக்கை, கணக்கு விவர அட்டவணை மற்றும் அதன் மீதான அரசின் ஆய்வறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

46. தமிழ்நாடு மாநில தொழில் அபிவிருத்திக் கழகத்தின் 1978–79 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

47. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் 1975–76-ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

48. 1972 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து 1975 ஆம் ஆண்டு மே திங்கள் 31-ஆம் நாள்வரை நடந்த அத்து மீறல்கள் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப் பெற்ற மாண்புமிகு நீதிபதி திரு. W. S. கிருஷ்ணசாமி நாயுடு விசாரணைக் கமிஷனின் இடைக்கால அறிக்கையின் மூன்றாம் பகுதி (தமிழ்). [1952 ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

1. 1–4–1976 ஆம் தேதிமுதல் 31–3–1977 ஆம் தேதி வரையிலான தமிழ்நாடு கண்காணிப்புக் குழுவின் 11-வது ஆண்டறிக்கை.

@2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) மூன்றாவது திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசர சட்டம் 21/1979).

@3. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பொது பொறுப்பாண்மைகள் (Public Trusts) (விவசாய நிலங்களின் நிர்வாகத்தை முறைப் படுத்துதல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 22/1979).